செய்தி வெளியீடு எண்: 058 நாள்: 22.01.2020

# கீழடி தொல்பொருட்களின் சிறப்பு கண்காட்சி

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், கீழடியில், தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை நான்காம் கட்ட அகழாய்வினை மேற்கொண்டது. இந்த அகழாய்வில் 5,820 தொல்பொருட்களும் பழந்தமிழரின் கட்டுமானப் பகுதியும் வெளிப்படுத்தப்பட்டன. கீழடி ஆய்வுகள் கி.மு. 6–ஆம் நூற்றாண்டளவில் தமிழகத்தில் மக்கள் எழுத்தறிவு பெற்று விளங்கி இருந்தனர் என்று தெரிவிக்கிறது. மேலும், இந்தியாவில் கங்கைச் சமவெளி பகுதியில் கி.மு.ஆறாம் நூற்றாண்டளவில் தோன்றிய இரண்டாம் நகரமயமாக்கம் தமிழகத்தில் காணப்படவில்லை என்ற கருதுகோள் இதுவரை அறிஞர்களிடையே நிலவிவந்தது. ஆனால் கீழடி அகழாய்வு கி.மு. ஆறாம் நூற்றாண்டளவில் தமிழகத்தில் நகரமயமாக்கம் உருவாகிவிட்டதை நமக்கு உணர்த்துகிறது.

கீழடியில் வெளிக்கொணரப்பட்ட தொல்பொருட்களை சென்னையில் உள்ள ஆய்வாளர், ஆர்வலர்கள் மற்றும் மாணவ–மாணவிகள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் அனைத்து தரப்பட்ட மக்களும் கண்டு பயனடையும் வகையிலும் தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம் மூலம் ஜனவரி 9 முதல் 21 வரை நடைபெற உள்ள 43வது சென்னை புத்தகத் திருவிழாவில் கீழடியில் கண்டெடுக்கப்பட்ட முக்கியத்துவமான தொல்பொருட்கள், மாதிரிகள், கீழடி அகழாய்வுக் குழிகளின் வான்வெளிப் பார்வை மாதிரி, தொல்பொருட்களின் முப்பரிமாண வடிவம் அடங்கிய மெய்நிகர் காட்சியகம் (Virtual Reality) எனப் பல்வேறு பிரிவுகளாக சிறப்பு கண்காட்சி அமைக்கப்பட்டது.

43வது சென்னை புத்தகத் திருவிழாவினை ஜனவரி 9 ஆம் நாள் மாலை 6,00 மணி அளவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இக்கண்காட்சியை பார்வையிட்டார். 12 நாட்கள் நடைபெற்ற இக்கண்காட்சியினை நாள்தோறும் புத்தக காட்சிக்கு வந்திருந்த இலட்சக்கணக்கான பொதுமக்கள் பார்வையிட்டு பாராட்டியது குறிப்பிடத்தக்கது.

இக்கண்காட்சியில் கீழடி அகழாய்வு குறித்த நூல் தமிழ் மற்றும் ஆங்கிலம் உள்ளிட்ட 24 மொழிகளில் வெளியிடப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. 12 நாட்கள் நடைபெற்ற சென்னை புத்தகத்

கண்காட்சியில் மட்டும் கழடி அகழாய்வு நூல் 23,000 பிரதிகளுக்கு மேல் விற்பனை செய்யப்பட்டு சாதனை புரிந்துள்ளது. தமிழ், ஆங்கிலம் மட்டுமின்றி மலையாளம், ஹந்தி, சமஸ்கிருதம், ஜப்பானியம், அரபி, கொரியன், ஆகிய மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட நூல்கள் குறிப்பிடத்தக்க அளவில் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இந்தியா மற்றும் பிற நாட்டில் உள்ள தமிழ் மக்களுக்கு அன்பளிப்பாக வழங்குவதற்கு அதிக எண்ணிக்கையில் மக்களால் வாங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

கீழடி குறித்த ஆய்வறிக்கை குறித்த நூல்களை தமிழ்நாடு அரசு பாடநூல் நிறுவன வளாகம், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சென்னை தலைமை அலுவலகம் மற்றும் சார் அலுவலகங்கள், மதுரை உலகத் தமிழ் சங்கம், மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை ஆகிய இடங்களில் தொடர்ந்து விற்பனை செய்யப்படும்.

மேலும், இக்கண்காட்சியில் இடம்பெற்ற கீழடி அகழாய்வுக் குறித்த மாதிரிகள், வான்வெளிப் பார்வை மாதிரி, தொல்பொருட்களின் முப்பரிமாண வடிவம் அடங்கிய மெய்நிகர் காட்சியகம் (Virtual Reality) சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை கவனத்தினை ஈர்த்து பொதுமக்களின் பேராதரவினை பெற்றுள்ளது. இதன் அடிப்படையில் இக்கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட மாதிரி வடிவங்கள், மெய்நிகர் காட்சியகம் (Virtual Reality) ஆகியவை சென்னை அரசு அருங்காட்சியகத்தில் பொது மக்கள் பார்வையிடுவதற்காக விரைவில் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

முதன்மை செயலாளர் மற்றும் ஆணையர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**